JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 310/2023 Date:22.06.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திருமதி. செல்வி |
| தந்தை பெயர் க/பெ | திரு. சேகர் |
| முகவரி | மேற்கு முகப்பேர், 2 வது பிளாக், சென்னை 37 |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 22nd day of June 2026.

2 வது ஆம் எதிரி ஆஜரில் உள்ளார். 1 மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவுகள் 355 BNSS பிரிவில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் மூன்று பேரும் எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னுடன் பக்கத்தில் இடது புறமாக அவர்களும் பூக்கடை வைத்துள்ளார்கள் அதன் மூலம் தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் ஏதாவது முன்விரோம் உள்ளதாக என்றால் இல்லை. கடந்த 05.10.2022 அன்று தான் சம்பம்மானது நடந்தது என்றும், எதானல் எதிரிகள் அடித்தார்கள் என்றால் நான் அங்கு பூக்கடை போடக்கூடாது என்றும், அவர்கள் தான் பூக்கடை போட வேண்டும் என்று கூறி என்னை அடித்தார்கள். சம்பவதினத்தன்று ஏதாவது திருவிழா நாட்களா என்றால் இல்லை. நான் சம்பவதினத்தன்று அங்கு கடை வைத்தேனா என்றால் போடவில்லை. சம்பதினத்தன் கடை போடவில்லை என்பதால் நீங்கள் அங்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. நான் பூ கொடுக்க அங்கு சென்று இருந்தேன். 05.10.2022 அன்று நடந்த சம்பவத்திற்காக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அங்கு கையில் கட்டு போட மருத்துவமனைக்கு சென்றதால் மறுநாள் புகார் கொடுத்தேன். சம்பவதினத்திற்கு மறுநாள் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரானது சம்பவம் நடந்து 14 நாட்கள் கழித்து தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று எனக்கும் எனது கடையின் எதிரில் இருக்கும் நகைகடையில் வேலை செய்யும் லட்சுமி என்பவருக்கும் தான் சண்டை என்றால் சரியல்ல. லட்சுமியிடம் சண்டை போடும் போது தான் எதிரிகள் தன்னை தடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் 06.10.2022 அன்று மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். 18.10.2022 அன்று தான் நான்

மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. அதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 19.10.2022 அன்று தான் நான் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் இருக்கும் இடத்தில் சிறு சிறு கடைகளுக்கு சிறு சிறு தொகையாக வட்டிக்கு பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல. அதன் மூலமாக தான் எதிரிகளும் என் மூலம் பணம் பெற்றுள்ளார்கள் என்றால் மற்றவர்களுக்கு பரிந்துரை செய்து பணத்தை வாங்கி கொடுப்பேன். நீங்கள் எதிரிகள் வெளியீரிலிருந்து வந்ததால் நான் மிரட்டினேன் என்றால் சரியல்ல. நீங்கள் அதிக வட்டி கேட்டதால் அவர்கள் பணம் வாங்கிவில்லை என்பதற்காக நான் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு அடியாட்களை வைத்து ரூ.1 லட்சம் கொடுத்தால் புகாரை வாபஸ் வாங்கிடுவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று நீங்கள் கடையை வைக்கவில்லை, அப்படி ஒரு சம்பவம் நடைப்பெறவில்லை என்றால் கடையை வைக்கவில்லை சரிதான். தொழில் போட்டி காரணமாக அவர்களிடம் பணம் பறிக்கும் நோக்கத்தோடு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பம் நடந்த 05.10.2022 அன்று மருத்துவமனைக்கு செல்லாமல் 18.10.2022 அன்று 15 நாட்கள் கழித்து தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. சம்பநடந்ததாக கூறப்படும் தேதியன்று நான் கடைக்கும் செல்லவில்லை, கடையும் வைக்கவில்லை, அப்படி ஒரு சம்பவம் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur